Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | | |
|---|---|---|---|
| Calendar | .. .. | } | |
| Miscellaneous | .. .. | } | |
| Preliminary Register | .. .. | } | **S.C.5/2020** |
| Sessions | .. .. | } | |
| | | } | Prosecution – **PW1** |
| Deposition of witness for | | } | Defence – |
| | | } | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | ரிவானு தீன் |
| Father/Husband Name | : | அபுபக்கர் |
| Village | : | தெற்குதரவை |
| Taluk | : | இராமநாதபுரம் |
| Calling | : | மேலாளர், KTM அகமது காசீம் எஸ்டேட், இராமநாதபுரம். |
| Religion | : | |
| Age | : | 73 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.10.2025.

(எதிரிகள் ஆஜர்.)

**முதன்மை விசாரணை:–**

நான் தற்போது இராமநாதபுரம் தாலுகா தெற்குத்தரவை கிராமத்தில் வசித்து வருகீறேன். இராமநாதபுரம் பஜாரில் மீன்மார்க்கெட்டுக்கு எதிரில் உள்ள KTM அகமது காசீம் எஸ்டேட்டில் மேனேஜராக பணிபுரிந்து வருகிறேன். சாட்சிகள் கருணாகரன், அழகுமீனாள் ஆகிய இருவரும் கணவன் மனைவி. சாட்சி கருணாகரன் எங்கள் எஸ்டேட்டில் வாட்ச்மேனாக வேலை பார்த்தார். கணவன் மனைவி இருவரும் எங்கள் எஸ்டேட்டிற்கு சொந்தமான காம்ப்ளக்சில் குடியிருந்து வந்தார்கள். கடந்த 24.11.2016 ம்

தேதி காலை 07.00 – 08.00 மணிக்குள் வாட்ச்மேன் கருணாகரன் எனக்கு போன் மூலம் மதுரை ரோட்டில் உள்ள KTM அகமது எஸ்டேட்டுக்கு சொந்தமான கட்டிடத்தின் காம்பவுண்ட் சுவரை மங்களநாததுரை, ஜெகன் பிரசாத், ராமதுரை பாண்டியன், நூர்தீன், சதாம் உசேன், அஸ்மத்துல்லா ஆகியோர்கள் JCB மூலம் இடித்துக்கொண்டிருப்பதாக தகவல் தெரிவித்தார். நான், எங்கள் அலுவலக ஊழியர்கள் முகமது நிஜாமுதீன் மற்றும் உள்ள காவலர்கள் சம்பவ இடத்திற்கு சென்று அவர்களிடம் ஏன் இடிக்கிறீர்கள் என்று கேட்டோம், அவர்கள் எங்களை தகாத வார்த்தைகளில் பேசி அடிக்க முயன்றார்கள், நாங்கள் அங்கிருந்து வெளியே வந்து காவல் நிலையத்திற்கு சென்று எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்ககோரி புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்த புகார் மனுதான். அந்த புகார் மனு **அ.சா.ஆ–1**. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:–

நான் 2015ம் ஆண்டு முதல் KTM அகமது எஸ்டேட்டில் மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் காலை 09.00 மணிக்கு வேலைக்கு சென்றால் இரவு 07.00 மணி வரை வேலை, என்னுடைய பணி KTM அகமது எஸ்டேட்டுக்கு சொந்தமான வாடகைகளை வசூலிப்பது, பணத்தை வங்கியில் செலுத்துவது, அலுவலகம் சம்மந்தப்பட்ட தொடர்புகளை பார்ப்பது. கட்டிடத்திற்கு வடபுறம்தான் காம்பவுண்ட் சுவர் இருந்தது. இடிக்கப்பட்டதாக சொல்லப்படும் காம்பவுண்ட் சுவருக்குரிய ஆவணங்கள் ஏற்பட்ட விதம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். காம்பவுண்ட சுவர் இடிக்கப்பட்டதாக சொல்லப்படும் சொத்து சம்மந்தமாக வருவாய் கோட்டாட்சியரிடம் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். அந்த சொத்துக்கு யார் பெயரில் பட்டா உள்ளது, யார் வரி செலுத்தி வருகீறார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. அந்த கட்டிடத்திற்கு உம்முல் ஹயர் பாத்திமா பெயரில் உள்ளது. இராமநாதபுரம் கோட்டாட்சியர் அலுவலகத்தில் 23.09.2009ம் தேதி குமரன் சேதுபதி பெயருக்கு மேற்படி சொத்திற்கான பட்டா மாறுதல் உத்தரவு ஏற்பட்டுள்ளது என்றால் தெரியாது. மேற்படி சொத்திற்கு இன்றைய தேதிவரை குமரன் சேதுபதி பெயரில்தான் பட்டாவும், அவர்தான் வரியும் செலுத்தி வருகிறார் என்றால் சரியல்ல, உம்முல் ஹயர் பாத்திமா பெயரில்தான் வரி செலுத்தப்பட்டு வருகிறது. மேற்படி சொத்து

சம்மந்தமாக குமரன் சேதுபதி மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் ரிட் மனு ( WP(MD)No.14394/2013) தாக்கல் செய்து பட்டா மற்றும் வரி பதிவுகள் அவரது பெயரிலேயே தொடர்ந்து இருக்க வேண்டும் என உத்தரவாகியுள்ளது என்றால் கேள்விப்பட்டேன். சாட்சி கருணாகரன் எத்தனை வருடங்களாக வாட்ச்மேனாக வேலை பார்த்து வந்தார் என்றால் நான் வருவதற்கு முன்பு பலவருடங்களாக வேலை பார்த்து வந்தார், எந்த வருடம் என்று எனக்கு தெரியாது. கருணாகரனுடன் எத்தனை பேர் தங்கியிருந்தார்கள் என்றால் அவரது மனைவி மற்றும் மகள். கருணாகரன் மற்றும் அவரது மனைவி, மகள் மேற்படி கட்டிடத்தில் வசித்து வந்தார்கள் என போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த இடம் ஆள்நடமாட்டம் உள்ள பகுதி என்றால் சரிதான். நான் எங்கு தங்கியிருந்தேன் என்றால் தெற்குத்தரவையில். தெற்குத்தரவைக்கும் சம்பவம் நடந்த இடத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 9 கிமீ. நான் செல்போன் மூலம் உடனே தகவல் கொடுத்தேனா என்றால் காவல் நிலையம் சென்று உடனே புகார் மனு கொடுத்தேன். எத்தனை மணிக்கு காவல் நிலையம் சென்று புகார் மனு கொடுத்தேன் என்றால் சுமார் 10.00 இருக்கும். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் சமயத்திற்கு முன்பு எதிரிகளை நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. என்னுடைய புகார் மனுவில் 8 எதிரிகளும், அவர்களது அடியாட்களும் வந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் ஞாபகமில்லை. அடியாட்கள் சம்மந்தமான விசயங்களை நான் விசாரணையில் சொல்லவில்லை என்றால் ஞாபகமில்லை. புகார் மனு தயார்செய்வதற்கு முன்பு எஸ்டேட் உரிமையாளரிட் கலந்து ஆலோசித்துதான்கொடுத்தேன் என்றால் சரிதான். புகார் மனு எங்கு வைத்து தயாரித்தேன் என்றால் எங்கள் அலுவலகத்தில் வைத்து தயாரித்தோம். என்னை போலிசார் 2 முறை விசாரித்தனர். எப்போது எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் காவல் நிலையத்தில் வைத்துதான் இரண்டுமுறையும் விசாரித்தார்கள். போலிசார் விசாரணையில் 28.11.2017 ம் தேதி என்னை விசாரித்ததாக சொல்லியுள்ளேன் என்றால் ஞாபகமில்லை. என்னுடைய புகார் மனுவிலோ, போலிசாரிடம் கொடுத்த வாக்குமூலத்திலோ எத்தனை JCB க்கள், அதை இயக்கியவர்கள் யார், காம்பவுண்ட் சுவரின் எந்த பகுதி இடிக்கப்பட்டது என்ற விவரத்தை சொல்லவில்லை என்றால் சரிதான், வடபகுதியை மட்டும் இடித்தார்கள்.

அரண்மனை பாத்திமா காம்ப்ளக்சும், KTM எஸ்டேட்டும் வெவ்வேறு இடங்கள் மற்றும் வெவ்வேறு உரிமையாளர்கள் என்றால் சரிதான். அரண்மனை பாத்திமா காம்ப்ளக்ஸ் தம்பியுடையது, KTM எஸ்டேட்டு அண்ணனுடையது இரண்டு சொத்துக்களையும் ஒரே நபர் தான் நிர்வாகம் செய்து வந்தார். என்னுடைய உரிமையாளருக்கும், 1ம் எதிரிக்கும் சொத்து சம்மந்தமாக முன்விரோதம் இருந்த காரணத்தினால் காவலாளியை பயன்படுத்தி என் மூலம் ஒரு பொய்யான புகார் கொடுக்க செய்துள்ளார் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் 1ம் எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

2 முதல் 6 ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–

புகாரில் நான் KTM எஸ்டேட்டின் மேனேஜர் என்றுதான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நீதிமன்றத்திற்கு வந்துள்ள நபர் முகம்மது நிஜாமுதீன் அவர் KTM எஸ்டேட்டில் கணக்கராக உள்ளார். காம்ப்வவுண்ட் சுவர் உள்ள இடம் பாத்திமா காம்ப்ளக்ஸின் ஒரு பகுதி என்றால் சரிதான். பாத்திமா காம்ப்ளக்ஸிற்கு நான் மேனேஜராக உள்ளேன் என புகாரிலோ, போலிசார் விசாரணையிலோ சொல்லவில்லை என்றால் சரிதான். நான் மேனேஜராக பணிபுரிவதற்கு மேற்படி சொத்தின் உரிமையாளர்கள் எனக்கு அனுமதி கடிதம் கொடுத்துள்ளார்களா என்றால் இல்லை. நான் சம்பளம் வாங்குவதற்கு ஆதாரமாக கையெழுத்து போட்டுள்ள ஆவணங்கள் உள்ளதா என்றால் உள்ளது. பாத்திமா காம்ப்ளக்ஸில் உள்ள கணக்குகளுக்கும், நிர்வாகத்திற்கும் எனக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. புகார் மனு கொடுப்பதற்கு முன்பே எதிரிகளுக்கும், பாத்திமா காம்ப்ளக்ஸின் உரிமையாளர் செய்யது மாசூக் என்பவருக்கும் இராமநாதபுரம் சார்பு நீதிமன்றத்தில் OS.No.46/2015 என்ற வழக்கை செய்யது மாசூக் தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். பாத்திமா காம்ப்ளக்ஸ் உரிமையாளர்கள் சென்னையில் இருப்பதால் பரக்கத் அலிகான் மற்றும் செய்யது இஸ்மாயில் ஆகீயோர்களுக்கு சிவில் மற்றும் சொத்து சம்மந்தமான குற்றவியல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு பவர் கொடுத்திருந்தார்கள் என்றால் சரிதான். அவ்வாறு பவர் எழுதி வாங்கியவர்கள் தான் உரிமையாளர்களுக்காக புகார் கொடுத்து நடவடிக்கை எடுக்க முடியும் என்றால் சரியல்ல. எதிரிகளின் அப்பா பெயர், வீட்டு கதவு எண், முகவரி ஆகிய விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் தற்போது ஞாபகமில்லை. ராமதுரை பாண்டியனை சம்பவத்திற்கு முன்பு தெரியுமா என்றால்

தெரியும். அவரை அடையாளம் காண்பிக்க முடியுமா என்றால் முடியாது. ஆஜர் எதிரிகளில் உள்ள நபர்களைஅடையாளம் காண்பிக்க முடியுமா என்றால் முடியாது. 2015 ம் ஆண்டிலேயே குமரன் சேதுபதி ராஜாவின் பவர் ஏஜெண்டான 1 ம் எதிரி மூலம் மற்ற எதிரிகள் கிரையம் வாங்கியுள்ளார்கள் என்றால் தெரியாது. புகார் மனு யார் எழுதியது என்றால் நான்தான் எழுதினேன். கருணாகரன் எனக்கு போன் செய்த நேரம் காலை 07.00 மணி. தெற்குதரவை கிராமத்திலிருந்து இராமநாதபுரத்திற்கு நான் இருசக்கர வாகனத்தில் வருவேன் என்றால் சரிதான். நான் சம்பவ இடத்திற்கு வந்தபோது மணி காலை 07.30 – 07.45 இருக்கும். JCB வாகனத்தை இயக்கிய நபரை நான் அப்போது பார்த்தேனா என்றால் பார்த்தேன். அவர் யார் என்று அடையாளம் சொல்லமுடியுமா என்றால் தெரியாது. JCB இயக்கிய நபரும் குற்றவாளிதான், ஆனால் நான் அவர் மீது புகார் கொடுக்கவில்லை. புகாரில் சொல்லப்பட்டுள்ள எல்லா விசயங்களும் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். என்னிடம் காட்டப்படும் புகாரில் வாட்ச்மேன் பெயர் சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை. அதேபோல் காவலாளி மனைவி, மகள் பெயரோ அவர்கள் அந்த கட்டிடத்தில் குடியிருந்து வந்ததாகவோ சொல்லப்படவில்லை என்றால் சரிதான். புகாரில் சொல்லப்பட்டுள்ள ரிட்மனுவின் எண்ணை நான்தான் சொன்னேனா என்றால் ஞாபகமில்லை. புகார் மனுவில் ரிட் மனுவின் எண்.21191/2014 என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த மனுவில் பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவு படி 2 முதல் 6 எதிரிகள் பெயரில் ஏற்பட்டுள்ள வரிவிதிப்பை தடுக்க வேண்டும் என உத்தரவு போடப்பட்டுள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நீதிமன்ற உத்தரவுப்படி வரி போடக்கூடாத என்றும் அதையும் மீறி எதிரிகள் சர்ச்சைகுரிய இடம் தங்களுக்கு சொந்தம் என உரிமை கொண்டாடியதால்தான் புகார் கொடுத்தோம் என்றால் சரிதான். நான் புகார் மனுவில் சொல்லியுள்ள ரிட்மனுவின் எண் சாந்தாராம் என்பவர் EB க்கு எதிராக போடப்பட்ட ரிட்மனு சம்மந்தப்பட்டது என நான் தவறான ரிட் மனு எண்ணை குறிப்பிட்டு போலிசாரை திசை திருப்பியுள்ளேன் என்றால் சரியல்ல, தவறுதலாக ரிட்மனுவின் எண் குறிப்பிட்டு இருக்கலாம். புகார் கொடுத்த அன்று நான் சிவில் வழக்கு நடத்திய வழக்கறிஞரின் அலுவலகத்திற்கு சென்றேனா என்றால் ஞாபகமில்லை. புகார் மனுவில் மற்றொரு ரிட்மனுவின் எண் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். புகார்

கொடுக்கும்போது வழக்கறிஞரிடம் ரிட்மனுவின் நகல் வாங்கி காவல் நிலையத்தில் கொடுத்தேனா என்றால் ஞாபகமில்லை. புகார் மனுவில் சான்றிதழ்கள் அனைத்தும் இணைக்கப்பட்டுள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் ஞாபகமில்லை. நான் மேனேஜர் என்ற முறையில் சிவில் வழக்கை நான் பார்வையிட்டேனா என்றால் இல்லை. போலிசார் என்னை இரண்டாவது முறை விசாரிக்கும்போது ராமதுரை பாண்டியனும், ராஜா குமரன் சேதுபதியும் சம்பவ இடத்திற்கு வரவில்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் ஞாபகமில்லை. நான் சம்பவ இடத்திற்கு சென்றபோது காம்ப்பவுண்டு சுவர் உடைந்து கிடந்தது என்றால் சரிதான். உடைந்த காம்ப்பவுண்டு சுவரை நானோ, என்னை சார்ந்தவர்களோ புகைப்படம் எடுத்தோமா என்றால் இல்லை. போலிசார் எடுத்தார்களா என்றால் எனக்கு தெரியாது. காம்ப்பவுண்டு சுவரில் உடைந்த பகுதிகளை போலிசார் கைப்பற்றி சென்றார்களா என்றால் தெரியாது. காலியிடத்தின் விஸ்தீரணம் எவ்வளவு என தெரியுமா என்றால் 1 ஏக்கர் 1 சென்டு. சிவில் வழக்கில் இடத்தின் அளவு குறைவாகத்தான் பட்டாவில் காட்டப்பட்டுள்ளதாக சொல்லப்பட்டுள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் ஞாபகமில்லை. வாட்ச்மேன் கருணாகரன் போனில் காம்ப்பவுண்டு சுவர் இடிக்கும் விவரத்தை சொன்னார் என புகாரிலோ, போலிசார் விசாரணையிலோ சொல்லவில்லை என்றால் சரியல்ல. புகாரில் யார் என்னை மிரட்டினார்கள் என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். என்னை மிரட்டியதாக சொல்லும் நேரம் காலை மணி 08.30 இருக்கும். ஏற்கனவே நிலுஜவயில இருந்த சிவில் வழக்கில் காம்ப்பவுண்டு சுவர் இடிக்கப்பட்ட பிறகு நஷ்டஈடு ரூ.1 இலட்சம் கொடுக்க வேண்டும் என திருத்தல் மனு தாக்கல் செய்யப்பட்டு அது தள்ளுபடி ஆகிவிட்டது என்றால் சரிதான். நான் சொன்ன மாதிரி, சொன்ன இடத்தில் எதிரிகள் யாரும் அக்கிரமமாக ஆக்கிமிப்பு செய்து சுவரை சேதப்படுத்த வேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. அந்த இடத்தில் எந்தவித காம்ப்பவுண்ட் சுவரும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. காலி இடத்திற்கு தற்போதும் ராஜா குமரன் சேதுபதி பெயரில் வரி கட்டப்பட்டு வருகிறது என்றால் தெரியாது. காலியிடத்திற்கு வரிரசிது எங்கள் உரிமையாளர் பெயரில் உள்ளதா என்றால் இல்லை. நான் சொன்ன மாதிரி, சொன்ன இடத்தில் எந்தவித சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கின் 2 முதல் 6 எதிரிகளாக

காண்பிக்கப்பட்டுள்ள நபர்கள் யார் என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. சிவில் நிலுவையில் இருக்கும்போது இந்த வழக்கை பதிவு செய்தால் எங்களுக்கு சதாகமாக தடைஉத்தரவு கிடைக்கும் என்று அறிவுரை கூறப்பட்டு எதிரிகள் யார் என்று தெரியாது நிலையில் எதிரிகள் பெற்ற கிரையப்பத்திரத்தின் நகலை பெற்று அதில் குறிப்பிட்டுள்ள பெயர், முகவரி ஆகிய விவரங்களை பெற்று அதை வைத்து எதிரிகள் மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. கருணாகரன் என்ற வாட்ச்மேன்அந்த இடத்தில் குடியிருக்க வில்லை என்றால் சரியல்ல. அதனால்தான் கருணாகரன் பெயர் புகார் கூறவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் எந்த குற்ற செயல்களிலும் ஈடுபடவில்லை என்றால் சரியல்ல. நான் புகார் கொடுத்த பின்பு JCB வாகனத்தை ஆய்வாளர் கைப்பற்றி நிறுத்தியிருந்தார் என்றால் சரிதான்.

Sd/-சி.மோகன்ராம்,
கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.